சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞு (1889-ம் ஆவணி மீ 28-ல் உ.

உ
சிவமயம்

செப்டிந்தந்தனசபை பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத் 94 ] யாழ்ப்பாணம்:- ருதிரோற்காரி ஞு, ஆனி மீ 17, 24-6-83, வெள்ளிக்கிழமை [இல -20

UNIVERSITY OF JAFFNA, S
RECEIVED
01-9-1983
PERIODICALS DIVISION
LIBRARY

## இணுவில் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா நிகழ்ச்சி 1983

நிகழும் ஆனி மாதம் 1 ம் திகதி (15-6-83) புதன் கிழமை மாலை 6 மணிக்கு விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, சாந்தி முதலியன நிகழ்ந்து ஆனி மாதம் 2-ந் திகதி (16-6-83) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை நண்பகல் 12 மணிக்கு துவஜாரோகணம் (கொடி ஏற்றம்) முதலியன நிகழும் தொடர்ந்து 25 நாட்கள் மகோற்ஸவம் நடைபெறும். ஆனி மாதம் 13 ந் திகதி (27-6-83) திங்கட்கிழமை பகல் அபிஷேக ஆராதனை இரவு ஷண்முகர் விழா (மஞ்சத் திருவிழா) ஆனி மாதம் 17 ந் திகதி (1-7-83) வெள்ளிக்கிழமை மாம்பழத் திருவிழா பிற்பகல் 4-30 மணி. ஆனி மாதம் 22 ந் திகதி (6-7-83) புதன் கிழமை கார்த்திகைத் திருவிழா ஆனி மாதம் 24 ந் திகதி (8-7-83) வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழா பி. ப. 5 மணி இரவு சப்பறத் திருவிழா ஆனி மாதம் 25 ந் திகதி (9-7-83) சனிக்கிழமை தேர்த்திருவிழா காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை காலை 10 மணிக்கு வசந்த மண்டபப்பூசை 10-30 மணி இரதோற்ஸவம். மாலை 4 மணிக்கு மடாலய ஆராதனையும் திருவூஞ்சலும்.

ஆனி மாதம் 26 ந் திகதி (10-7-83) ஞாயிற்றுக் கிழமை தீர்த்த விழா மாலை 5 மணிக்குத் தீர்த்த உற்ஸவம் இரவு 6 மணிக்கு திருவூஞ்சல். ஆனி மாதம் 27 ந் திகதி (11-7-83) திங்கட்கிழமை பூங்காவனம். பகல் விசேட அபிஷேக ஆராதனை இரவு 7 மணிக்கு திருக்கல்யாண விழா.

## இராமநாதன் கல்லூரிப் பழைய மாணக்கர் ஆண்டு 1983

### அபிவிருத்திச் சங்க ஆண்டுவிழாவில் அறிவித்தல்

நல்லநெறியாளர் இராமநாதப் பெரியார் நிறுவிய பெண்கள் கல்லூரியின் வளர்ச்சியில் இக்கல்லூரி அபிவிருத்திச் சபை இவ்வாண்டு அரிய சாதனை செய்து மேலும் பணி செய்ய முயற்சிப்பது முன் மாதிரியாகும் என்று ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிய கல்லூரி அதிபர் திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் அவர்கள் குறிப்பிட்டுரையாற்றிய பின் யாழ் மாவட்டசபைத் தலைவர் திரு. சு. நடராசா அவர்கள் சிறப்புரையாகக் கல்லூரிக்கோர் அபிவிருத்தி நிதி அவசியம் எனச் சுட்டிக் காட்டினர்.

கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா அவர்கள் அரசினர் பாடசாலைகளின் எண்ணுத்தொகை கூடுதலான வகையிலே கல்லூரி அபிவிருத்திக்குப் பழைய மாணக்கர்களும் நலன் விரும்பிகளோரும் கைகொடுத்து அரவுதல் முறையாகும் என்றனர்.

இணுவில் கிராமோதய சபைத் தலைவர் திரு. செ. இலகுநாதன் அவர்கள் சிரமதானப்பணியை இன்னும் சிரேக்க ஊரவர்கள் முற்பட வேண்டுமென்றும் இராமநாத அறக்கட்டளையிலிருந்து நிதி இக் கல்லூரிப் புனர் அமைப்புக்கு அவசியம் என்றும் கூறி அபிவிருத்தி நிதி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பிரேரித்தார். அது ஏகமனதாக நிறைவேறியது.

செயலாளர் திருமதி அ. சிவப்பிரகாசபிள்ளை ஆண்டறிக்கையை வாசித்து அபிவிருத்திச்சபை அமைப்பை விளக்கிக் கூறினர்.

திரு. நா. சிவப்பிரகாசம் அவர்கள் 1984 ம் ஆண்டு இராமநாதன் கல்லூரிப் பழைய மாணக்கர் ஆண்டாக வெளிப்படுத்தப்படவேண்டும் என்றும் பழைய மாணக்கர்கள் எங்கு இருந்தாலும் தங்கள் முகவரியைத் தாமாகவே அறிவிக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறினர்.

உடுவில் அ. மி. பாடசாலை அதிபர் திரு சி. நடராசா அவர்கள் நன்றியுரை கூறினர்.

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினர் கோயில் என வழங்கும் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் மங்களகரமான உருதிரோத்காரி ஆண்டு ஆனித் திங்கள் 16 ஆம் நாள் (30-6-83) வியாழக்கிழமை காலை 6-14 மணி முதல் 7-13 மணிக்குள் வரும் மிதுனலக்கினத்தில் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது.

24-6-83 வெள்ளிக்கிழமை அதிகாலை 5-45 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும்.

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான குருபரம்பரையும், ஸ்ரீமூத்தநயினர் கோயிற் பிரதமகுருவும் ஆகிய சிவஸ்ரீ சு. கைலாசநாதக் குருக்கள் (பாப்பாக் குருக்கள்) பிரதிட்டா பிரதம குருவாகப் பணி புரிவார்கள்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை பேராசிரியர் கலாநிதி சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் நவாலி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள். நியாய சிரோமணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஆகியோர் சர்வ சாதக போதகர்களாகவும், சிவஸ்ரீ சாம்பசிவ தணிகாசலக் குருக்கள், சிவஸ்ரீ ச. சுப்பிரமணிய பட்டர் ஆகியோர் பிரதிஷ்டா குருமார்களாகவும் கருமமாற்றுவர்,

சிவஸ்ரீ கா. இரத்தின கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ க. பரமேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரியசுவாமிகள், வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் அருளாசியுரை வழங்குவார்கள்.

## ஆராய்ச்சி பற்றி ஓர் ஆராய்ச்சி

[10-06-83 இதழின் வளர்ச்சி—2.]

இந்துசமய நிகழ்ச்சிகளின் காலங்கள் இவை தாம் என்று உறுதியாகக் குறிப்பிடப்படாமலே நூல்களிற் காணப்படுகின்றன. சில காலங்கள் அநுமானத்தாற் பெறப்பட்டவையே.

ஒன்றை மட்டும் உதாரணத்துக்கெடுத்துக்கொள்வோம. சமயகுரவர்களின் காலம் பலவாறு நிர்ணயிக்கப்பெற்றிருப்பது ஆராய்ச்சியின் முற்றுதநிலையைச் சுட்டிக் காட்டுகின்றது. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் நால்வரும் சைவ சமய இலக்கியத்தின் அருமணிகள். இவர்கள் திருவாய் மலர்ந்த தெய்வீகத் தோத்திரங்கள் சைவ சமய சாத்திரங்களைப் பத்தி வழியாக விளங்க வைக்கின்றன. கடவுட்கலையிற் கதிர் தனமாகிய இவ்வரிய பொக்கிஷத்தைப் பேணுவதற்குரிய வழி அவற்றுக்குரிய நிகழ்ச்சிகளை நிரற்படுத்தி நெறி வகுத்துத் திருமுறை இலக்கியத்தைத் திகழ வைப்பதுவே.

ஆனால் இந்தச் சமய குரவர்களின் நிகழ்ச்சிகளை ஆராய்ச்சி செய்து உண்மை வரலாற்றை ஒருவாறு அநுமானிக்க ஒருங்கிணைந்த ஆய்வுமுயற்சி அமைக்கப்படவில்லை.

ஆராய்ச்சி தனித்தொருவராற் செய்யப்படக் கூடியதொன்றாகாது. சங்கம் அமர்ந்து ஆய்ந்தனர் தமிழை என்று நூல்கள் கூறுகின்றன. பலப்பல புலவர்கள் சங்கப் பலகை ஒன்றில் அமர்ந்து நூல்களையும் சமய நிகழ்ச்சிகளையும் ஆய்வார்கள். ஆனாற் சமய குரவர்களின் வரலாறு உள்ளவாறு எழுதப்படலாம்; நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி நிர்ணயிக்கப்படலாம்.

சமய நிகழ்ச்சிகள் அநேகமாக அரசர்களின் ஆட்சியுடன் தொடர்புள்ளனவாக இப்பொழுதுள்ள வரலாற்று நூல்களிலிருந்து காண்கின்றோம். இவ்வாறு சமய நிகழ்ச்சிகளுடன் இணைந்த மன்னர்களின் காலங்களைக் கொண்டு சமய நிகழ்ச்சிகளுக்குரிய குரவர்களின் ஆண்டுகளையும் காணலாமெனின் இவ் வேந்தர்களைப்பற்றிய காலங்களைக் கண்டுகொள்வதில் முரண்பாடு முற்படுகின்றது. அந்நிய அரசர்களின் வரலாற்றிலே கால நிர்ணயம் சாலச் சிறந்ததாக இருப்பதனால் எந்த அரசன் எவ்வாண்டில் இறைமை நிகழ்த்தினான் என்பது புலப்படுகின்றது. ஆங்கிலேய அரசர்கள் பரம்பரை ஒன்று உண்டு. கென்றி முதலாவது இரண்டாவது என்று எட்டாவதுவரையும் சார்ல்ஸ் ஜார்ச்சு ஜேம்ஸ் வேந்தர்களும் எண் இலக்கத்தாற் குறிப்பிடப்பட்டு அரச வரலாறு பூரணமாய் இருக்கின்றதைப் போன்று சேர சோழ பாண்டியர்களின் வரலாறும் வரையப்பட்டிருந்தால் நிகழ்ச்சிகள் பலவற்றை நிச்சயமாகக் காலஞ் சாலக்காட்டக் கூறமுடிந்திருக்கும்.

அன்றியும் பாரதநாட்டு மூவேந்தர்கள் வரலாற்றுடன் இலங்கை மன்னர்களும் தொடர்புபடுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் பல சமய சம்பந்தமானவையாகையால் ஒரு பூரண ஆராய்ச்சி பயன் தருமல்லவா?

மாமதுரை நகருக்கோர் ஆபரணம் ஆக உள்ள தென்ற சமயநிகழ்ச்சியின் கண்ணியமான உண்மையை கட்டுக்கதையா கற்பனையா கனவில் எழுந்த புனைவா என்றெல்லாம் ஆராய்வதற்கு ஆலவாய் என்ற ஆதித்தலத்தின் புராண வரலாறுகள் போதியன உண்டல்லவா? மூப்பெரும் புராணங்களில் முன்னிற்கும் திருவிளையாடற் புராணம் இந்த ஆராய்ச்சிக்குரிய வகையில் உதவும் அன்றே. நரிபரியான நிகழ்ச்சி ஒன்று அல்லது பலவேறு காலங்களிலே பல்வேறு இடங்களிலே நிகழ்ந்தனவற்றுள் ஒன்று. ஆராயுங்கள் சீராக ஆராயுங்கள். சமய நூல்களை மட்டும் ஆராய்ச்சிக்கமைய வைத்துக் கால நிர்ணயம் செய்யப் புகுந்த நூலாசிரியர்களின் முடிபுகளைக் கையாளுவதுடன் இயற்கையின்

(வளர்ச்சி 2 ஆம் பக்கம்)

உ
திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ருத்ரோற்காரி ஹூ ஆனி மீ
17-6-83 24-6-83, வெள்ளி


## சமயம் சாற்றுவதென்ன?

•••○○•••

வாழ வழி வகுப்பது மதம் - சமயம். வீழ விடாமல் ஏற்றுவது சமயம். தாழ்ந்துபோகும் நேரத்திலும் நல்லறிவு சூழ்ந்து சுகந் தருவிப்பது சமயம். ஆதலினாலன்றோ அனைத்துலகிலும் சமய வழிபாடு நிலவுகின்றது.

மதம் என்ன, மாயம் என்ன என்று மயக்க மொழி பகரும் மமதை பிடித்தவர்களும் ஆபத்து வருங்கால் அப்பனே அம்மையே என்று தஞ்சம் கேட்பார்கள். அவ்வளவும் செய்துகொண்டும் அப்பன் அம்மை இல்லை என்றே சொல்லித் திரிகுறுவர்!

பிறவிப் பெருங் கடல் நீந்துகின்றனர் பிறவியெடுத்த ஆன்மாக்கள் யாவும் என்று சொல்லப் படுகின்றதே. ஒவ்வொரு பிறவியும் ஒரு கடலாகப் பலவேறு பிறவிகள் பெருங் கடலாகின்றன. ஒருமுறை கரை சேர்ந்து மறுபடியும் பிறவிக் கடலிற் புகுப் பின் கரை அடைந்தவண்ணம் ஈற்றில் மீளாக் கரை மேவுவது முத்தி என்னும் முற்று. இது சமயம் தரும் விதி.

'அல்லல்' என்னும் பல் கடற் பிழைத்தும்'' என்று சொல்லும் மணிவாசக சுவாமிகள் அதன் பயன தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகுதல் என விளக்கினர். மக்கள் படும் மாயவலையில் உறுகின்ற துன்பத்திலிருந்து விடுபடுவதற்குத் தெய்வம் என்றதோர் சித்தம் தோன்ற வேண்டும்.

இன்று உலகம் எங்கும் அலலோல கல்லோலமும், இடுக்கணும் என்று யாவரும் அறிவர். இதிலிருந்து ஈடேறவழி ஒன்றில்லையா என்று இறைவனை எண்ணும்பொழுது அந்தச் சிறந்தவரான தெய்வ நம்பிக்கையைப் பெருமளவாக்கப் பழகுவோமேயானால் பழியிலிருந்து மீள வழி தானாகவே எழும்.

வன்றொண்டனென்று இறைவனாற் பட்டஞ் சூட்டப்பெற்ற ஆலால சுந்தர அடியார் அநுபவவாயிலாகச் சொல்வதைப் போன்று திருவிடைமருதூர்த் திருப்பதிகத்திற் காட்டிய உண்மையை ஈண்டுக் காட்டுவது பொருத்தம்.

திருச்சிற்றம்பலம்
புன்று வேப்பனி
வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை
பொருந்திய நாளும்
என்னை னாக்கினி
இற்றைக்கு நாளை
என்றிருந்திடர்
உற்றனன் எந்தாய்
முன்ன மேஉன்
சேவடி சேரா
மூர்க்க னாகிக்
கழிந்தன காலம்
இன்னம் என்றனக்
குய்வகை அருளாய்
இடைம ருதுறை
எந்தைபி ரானே.
திருச்சிற்றம்பலம்.

மூர்க்கராயுள்ளவர்கள் வாழ்க்கை நிலையாமையை யறியாது இடருற்றுப் பின் இறைவனை வேண்டித்திடமுற்றனர் என்று சுந்தரர் சுருக்கமாகச் சொல்லிவிட்டார். உய்வகை காண வேண்டின் தெய்வமே கதி; மதநூல்கள் பல விதமாக விருக்கலாம். ஆனால் அவை நெறிமுறையையே எடுத்தியம்புகின்றன.

பிறவிப் பயன் ஒன்றுண்டு; இந்த விதத்திலே தான் இன்பமான விடுதலை பாசங்களிலிருந்து விலகி; ஈசன் கழலடைவதே முத்தி. அதுவே அளப்பரிய இன்பம். ஆகையால் அந்த வழியை நாடுங்கள் என்று சொல்கின்றது சைவம்.

இதற்குச் சித்தத் தெளிவு வேண்டும். மூர்க்கராகாது, யார்க்கும் அன்பராகும் மார்க்கத்தைப் பற்றிக் கொள்வதே சமய வாழ்க்கையின் பயன்.

"வெடி கொள் வினையை வீட்ட வேண்டுவீர்'' என்று திருக்கோலக்காப் பதிகத்திலே சம்பந்தர் ஞான மொழி உண்டு.

இருங் கடல் வையத்துப் பிறவி எடுத்தல் புண்ணிப் பேற்றினால். அப்பேற்றுக்குரிய அறிகுறி மகாதேவனை வாயாரப் பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடுதலுமாம்.

வழி நன்றாக வகுக்கப்பட்டிருக்கின்றது; கண்ணிருந்தும் காண்கின்றோமில்லையே.

சமயம் ஒன்றே எம்மை இந்த அமையத்திற் காக்க வல்லது

சமயநெறி நிற்பதே சாலச் சிறந்தது. புன்னெறி அதனிற் போகாது, பொய்யும், புலாலும், கள்ளும் காமமும் களவும் தவிர்ந்து நன்றே நினைத்து நன்றே யுரைத்து நன்றே புரிந்து வருவதற்கு உகந்த முறையை உரைத்திருக்கின்றனர் எம் சமய குரவர்கள்.

உலகில் உய்ய வேண்டில் உமை ஒரு பாகனை நினையுமா நினைக்கும் நெறி நிற்க வேண்டும்

இன்றைய உலகில் இறைவனை எண்ணுமா றெண்ணில் இடரொன்றில்லா தொழியும். உய்வலாய; மெய்யிது.

திருச்சிற்றம்பலம்
மிறைபடுமிவ் வுடல் வாழ்வை நெஞ்சமே

## மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் மணவாளக் கோலம் ஆனி மாதம் 15 - ஆம் நாள் 29 - 06 - 83 புதன்கிழமை நடைபெறும். பகல் விநாயகப்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேக ஆராதனைகளும் இரவு திருவூஞ்சலும் சுவாமி உள்வீதி வலம் வரும் அருட்காட்சியும் இடம்பெறும்

## என்னை என்னால் எனக் கறிவித்தவன்

குருவென்று குவலயத்தில் ஒருவரையே கொள்ளுதல் குணமாகும். இருடிகள் யோகியர் முனிவர்கள் இவர்கள் எல்லாரும் எமக்கு வழிகாட்டும் தெய்வீக அறிஞர்கள் இருந்தும் ஒருவரையே குலக் குருவாகக் கொள்ளும் வழக்கம் வாழ்க்கைக்கும் ஆன்மலாபத்துக்கும் பொருந்தும்.

இவ்வகையிலே கொழும்புத்துறை யோகர்சுவாமிகள் அனேக அடியார்களுக்குத் தனிக் குருவாக விளங்கினார் விளங்குகின்றார் விளைந்த ஞானியான இவர் மனிதர்கள் ஒழுக்க நெறியை முன்வைத்து நடேற வழிகாட்டி வந்தவர்.

காவியை விரும்பவில்லை அவர் என்றால் வேறொன்றையுமே விரும்பாதிருக்கின்றார். யோகர் நிலைக்கு முன்னும் பின்னும் ஒரே உருவமாயிருந்து உற்றுப் பார்ப்போருக்குப் பழுத்த ஞான சொருபமாகத் துலங்கிய கொழும்புத்துறைக் குருமணி தன்னை ஒரு காட்சிப் பொருளாக ஒருவரும் கருதப்படாதென்ற நியமத்தைக் கடைப்பிடித்து வந்தனர்.

அவர் சொன்ன மொழி எல்லாம் ஈடேற்றத்துக்குரியன. அவற்றுள் ஒன்றும் "என்னை என்னால் எனக்கறிந்தவன்'' ஆறுமுகம் செய்தவன் ஆறுமுகன் என்று பாடலைக் கேட்கும் பொழுதெல்லாம் இந்த யோகர் சிந்தனைச் செய்யுள் நினைவுக்கு வரும் முழுதும் உண்மை.

※

நெஞ்சே
வினையிலே கிடந்து
முந்தி விளைவேல
நெஞ்சே
குறைவுடையார் மனத்து
ளானான் குமரன் தாதை
கூத்தாடும்
குணமுடையான்
கொலை வேழத்தான்
அறைகழலுந் திருவடி
மேற் சிலம்பு மார்ப்ப
அவனிதலம் பெயர
வரு நட்டம் நின்ற
நிறைவுடையான் இடமாய்
நெய்த் தானமென்று
நினையுமா நினைக் தக்
தகக்கால் உய்யலாமே.
திருச்சிற்றம்பலம்

நினையுமா நினைத்தல் என்றால் நெறி நிற்றல் என்பதே. நெறி எனின், புண்ணியமன்றிப் பிறிதொன்றையும் நிகழ்த்தா திருப்பது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', இந்தக் கேண்மை எண்ணம் இயங்குமேயானால் எந்த வகையில் வஞ்சம் மனத்திற் குடிகொள்ள முடியும்?

சமய நெறியைச் சற்று உற்று நோக்குமின். உய்ய வழி காண்மின்.

## ஆராய்ச்சிபற்றி ஓர் ஆராய்ச்சி

( 1 - ஆம் பக்கத்து வளர்ச்சி )

ஆய்வுக்குரிய நீலம் நீர் (வைகை) முதலியவற்றையும் நுணுகிப்பார்க்கின் சில உண்மைகள் நுண்ணறிவுக்குள்ளாகும்.

மறைமலை அடிகள் இறைநெறி நூல்களைக் கற்றேர்ந்து சில குறிப்புக்களை எடுத்துக் காட்டி காலத்தால் முற்பட்டவர் மணிவாசகர் எனபதையும் வேறோரிடத்திலே கேரள நாட்டில் இயேசு மதம் புக்ககாலம் கிறிஸ்துவுக்குப் பின் 2ம், 3ம், நூற்றாண்டாகவும் அக் அக்காலத்திற் கேரளத்தில் கிறிஸ்துமதத்தை வேரறச் செய்வான் புகந்த போதகர்கள் தங்கள் போதனைகளுக்கு இடையூறுகவோர் மந்திரவாதியிருந்தானென்றும் விவிலிய வரலாற்று ஆவணங்கள் சிலவற்றில் குறிப்பிடப்பட்டதாகவும் அம்மந்திரவாதி யாருமல்ல மாணிக்கவாசகசுவாமிகளே யென்றும் ஆராய்ச்சிக் குறிப்பாகவுள்ளதின் உண்மையைக் கேரளநாட்டுக் கிறிஸ்தவ வரலாற்றிலிருந்து மேலும் ஆராயலாமன்றோ.

சுவாமி வேதாசலம் அணிந்தவற்றின் பின் வெண்ணெய்க்கண்ணனார் என்று விளங்கிய பண்டிதமணி நவநீத கிருஷ்ணபாரதி அந்தணப் பெரும்புலவர் திருவாசகத்துக்கோர் விரிவுரை செய்யுங்கால் வாதவூரடிகள் காலம் ஏனைய சமய குரவர்களின் காலத்துக்கு முன் என்று கூறப்புகுந்த வேளை சமணம் புத்தம் என்னும் சமயங்களின் காலங்கள் பற்றி எடுத்துரைத்துப் புத்தத்தையே குறிப்பிட்ட மணிவாசகர் சமணத்தைப் பற்றிச் சற்றுங் கருதிடத்து அச்சமயம் பிந்தியதென்றும் அச்சமயத்தைமிக அஞ்சினர் அப்பர் சம்பந்தர் ஆகையால் அவர்களின் காலம் மணிவாசகருக்குப் பின் என்றும் சிற்றுரை செய்திருக்கின்றனர் இக்குறிப்பின் பொழிப்பை அடிப்படையாகக் கொண்டு தென் இந்தியாவிலே புத்தசமயம் பரவிய காலம் எது சமணம் தலைதூக்கிய காலம் எது என்றறிந்து சமய குரவர்களின் பரம்பரையைக் கால மரபு கொண்டு நிர்ணயித்தால் ஏலவே சமயநிகழ்ச்சிகளையும் நன்கு உலகம் புரிந்து இந்த மதத்தைப் பற்றி இயன்றளவு அறிய முடியும்.

வல்லுநர்கள் இலக்கியத்துறை போய புலவர்கள் இன்றியமையாதவர்கள் அவைக்குத் தனி அலுவலகம் அமைத்து ஆங்கு இந்த ஆய்வுச் சங்கப் பலகையில் இப்பேரறிஞர்கள் அமர்ந்து ஆராய்ச்சித் திட்டத்தை வகுத்து அத்திட்டத்தைச் செயற்படுத்தக் குழுக்களை நியமித்து எடுத்தபணியைத் தெய்வத் தொண்டராக இயற்றுவார்களேயானால் இந்தச் சமய வரலாறு எழிலாக அமையும். கற்பனைகளில் எழுந்த விபரீதக் கொள்கைகள் யாவும் விலகி உண்மை நெறி புலப்படும்.

இப்பணி எத்தகையதாயிருக்க வேண்டுமெனில் ஏற்றதோர் விடயத்தை இங்கு குறிப்பிடுதும்.

### திருவாதவூரர் வரலாறு

திருவாசகத் தேனும் திருக்கோவைத் தெள்ளமுதும் படைத்த பெருந்தகையாரை நன்கு உலகம் அறியவேண்டும். அருந்தவக் குரிசிலாம் மாணிக்கவாசகசுவாமிகள் சைவ சமய நெறியை எவ்வாறு விளக்கினர் என்று அவனி உணரவேண்டும். இவ்விடயத்தில் இதுவும் ஓர் வரலாறு என்றமட்டில் இருக்காமலும் திருவாதவூரடிகள் புராணம் தரும் சரிதை அளவில் நிற்காமலும் வேதசிவாகம இயலுடன் இணைந்து மணிவாசகரின் பின் எழுந்த சைவ சித்தாந்த நூற்பொருளுடன் பொருந்தி உண்மை விளக்கமாகச் சமய குரவரின் நிகழ்ச்சிகளும் திருவாய் மலர்ந்த செம்பொருளும் தொடர்பாகத் தொகுத்து வகுக்கப்படுதல் வேண்டும்.

இக்குரவர் தோன்றியது திருவாதவூரில் என்பர். இப்பெரூரிலேயே கபிலரும் பிறந்தனர் என்று சில நூல்கள் எடுத்தாளுகின்றன. எனவே இவ்வூரைப் பற்றிச் செவ்வனே ஓர் ஆய்வு பல வேறுவகையாக நிகழ்த்தப்படல் வேண்டும்.

இயருசலேம் மக்கா காயா போன்ற சமயப்பழமை சான்ற ஊர்கள் யாவும் உலகம் போற்றும் உன்னத இடங்களாகத் திகழ்கின்றனவென்றாலோ திருவாதவூர் ஏன் அத்தகைய அனைத்துலக கவனத்தை யீர்க்கவில்லை. இந்த மதத்தவர்களின் ஆராய்ச்சித்திறன் இவ்வளவுதான் என்பதோ. இந்தத் திருவாதவூர் எங்கே இருக்கிறது. இங்குள்ள பழம் பெருமைக்குரிய வேறு நிகழ்ச்சிகள் யாவை? தொல் பொருள் ஆய்வுக்குரிய தூய இடம் இதுவல்லவா?

இனி மாணிக்கவாசகசுவாமிகளுக்கு இக்காரணப் பெயர் காணப்படுவதன்றி இயற்பெயர் இன்னும் அறியப்படவில்லையே வாதவூரடிகள் வழிபட்ட தலங்கள் அப்பெருமகனார் தந்த அரும் பெரும் நூல்களில் அமைந்திருக்கின்றன. அவ்வகையிலே இத்தலங்களில்

( வளர்ச்சி 8 ஆம் பக்கம் )

## பாவிப்பார் மனத்தூறும் தேன்

சுந்தர நாயனார் சொற்றொடர் இதனை நினைந்தாலும் உறுவது பத்திப் பரவசமென்னும் தேன்

இறைவனை எண்ணும் இதயத்தில் எழும் ஊற்றினைத் தேனென்றனர் வள்ளுவர். என்னே? இந்த எண்ணற்கரிய இன்பத்தை அனுபவித்தவர் இச்சமய குரவர்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவார் ஈசன் நண்ணும் பொழுது ஒரு நல்லூற்றும் நயக்கின்றது. அது இறவாத அன்புத் தேன் ஊற்று.

பரமனைப் பயன்படுத்துவார்க்குப் பரிசு அன்பாம் செழுந்தேன் ஊற்று.

தித்திப்புக்குத் திறமான தேன் அந்தத் தேன் அரன் அன்புத் தேனுகில் அது தரும் சுவை தேவாமிர்தமன்றோ.

இந்தத்தேனை இன்னொரு வகையாகப் பெறலாம் என்றார் ஐந்தாங்குரவர் திருக்கேதீச்சரத் தேன் பொந்தைச் சுட்டிக்காட்டி.

## சண்டிஹோமம்

### துர்க்கா திருத்தலத்தில்

நிகழும் ஆனித் திங்கள் 17ம், 18ம், 19ம நாட்கள் (1, 2, 3-7-1983) வெள்ளி, சனி, ஞாயிறு சண்டிஹோமம் என்னும் பெருந்திரு நிகழ்ச்சி பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் இலங்கை அதிசிரேஷ்ட பிரதிஷ்டாக குருக்கள் பேரவை முன்பு அந்தணப் பெருமக்கள், கலைஞர் அடியார் கூட்டம் ஆகந்தமாயமைய நடைபெறும் என்று தெல்லிப்பளை துர்க்காதேவஸ்தான நிருவாக சபையினர் அறிவிக்கின்றனர். துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தலைமையிலுள்ள நிருவாக சபையினர் அயராதுழைத்து இந்த அரிய நிகழ்ச்சிக்குரியன யாவற்றையும் இரவு பகலாக ஒழுங்கு செய்கின்றனர்.

கணபதிஹோமம் வெள்ளிக்கிழமை, நவக்கிரக ஹோமம சனிக்கிழமை, சண்டி ஹோமம் ஞாயிற்றுக்கிழமை —

## MAVIDDAPURAM....

(Contd from page 4)

area. Then it was that in Lanka the heyday of Saiva awakening was dawning.

The deities installed in this historic Temple are all the handiwork of renowned Chola sculptors The deity in the Moolasthanam in meditative manner has the characteristic features of a Guani. Arudkavi interpreting the posture of this Deity lisped in numbers.

to be continued

நற்சிந்தனை 2

# "சந்தனம்"

முருக வே. பரமநாதன்

யுத்தவீரன் களத்திலே இறங்குமுன் தன்னை எந்த ஆயுதமுந்தாக்காமல் இரும்புக் கவசம் அணிந்துகொள்வதுபோல, இன்ப வீட்டை அடைவதற்கு ஆக்கத்தைத் தரும் வெண்ணீறாகிய கவசத்தின் உள்ளே முழுவதும் புகுந்துகொள்ளுங்கள் என்பது மணிவாசகர் வாக்கு. நாம் கோவிலுக்குச் சென்றால் விபூதி அணிந்து சந்தனமும், குங்குமமும் வைத்துக்கொள்கிறோம். இதன் உண்மைப் பொருளை இன்றைய சிந்தனையாகக் கொள்வோம். கடலிலே படும் முத்து இருக்கின்றதே. அதனால் பிரயோசனம் அணிவோர்க்கன்றி கடலுக்கோ, முத்துக்கோ இல்லை. 'யாழ்' இருக்கிறது. என்ன இனிமையான ஓசை, கேட்பவர்கள் எல்லாம் மெய்மறந்துவிடுகிறார்கள். 'யாழ்' பெற்ற பயனெதுவும் இல்லை! இதேபோலப் பொன்னும் பிரயோசனம் பொன் படைத்தார்க்கன்றிப் பொன்னுக்கில்லை. சந்தனமும் அப்படியே. "சந்தன மென்குறடு தான் தேய்ந்த காலத்தும் கந்தம் குறைபடா" என்பது ஔவை மொழி. இறைவனால் நாம் பிரயோசனம் அடைவதேயன்றி, நம்மால் அவனுக்கு எவ்வித பயனுமேயில்லை என்பதை நாம் மனதில் உள்ள வேண்டும்; உணர வேண்டும். பண்புள்ளவர்கள் விசால புத்தியுள்ளவர்கள் - தக்கவர்கள் - கொடுத்துக் கொடுத்துத் தாம் வறியவர்கள் ஆகிறார்கள் அவர்கள் தனம் சிறியராயினும் மனஞ்சிறியராவதில்லை. அதுபோல நாமெல்லாம் மனஞ் சிறியராய் வாழக்கூடாதென்பதை மட்டுந்தான் காட்டுகிறதா சந்தனம். இல்லவே இல்லை. தான் தேய்ந்து மற்றவர்கட்கும் மனோரம்மியத்தையளிப்பதுபோல நாமும் மற்றவர்களின் நெஞ்சில வாசனை வீசக் கூடியதாக நடந்துகொள்ள வேண்டும்.

பிறர் நம்மை வாழ்த்தும் வகையில் உபகாரிகளாக வதோடு நின்றுவிடாது மற்றவர்களின் நல்ல எண்ணங்களை, பண்புகளையெல்லாம் கொள்ளவும் வேண்டும். எனவே எமது சிந்தனைகள், செயல்கள் சிறப்படைந்தால் மட்டும போதாது மற்றவர்களின் நல்ல அம்சங்களையும் பெற வேண்டும். சந்தன மரத்தைச் சார்ந்த மரங்களும் கனல் மணப்பது போல நம்மால் மற்றவர்களும், மற்றவர்களால் நாமும் நல்லவர்களாய் மிளிர வேண்டும். நாமுஞ்சிறந்து, மற்றவர்களையும் சிறக்கவைக்க வேண்டும். பிறர் சிறப்புக்கண்டு நாம் மகிழ வேண்டும். சந்தனக்கட்டையை அரைப்பதுபோல நம்முடைய வினைகளை, பாவங்களை நாம் எமது என்ற தற்போதங்களைத் தேய்க்க வேண்டும். இவைகள் தேயத்தேயச் சித்தம் சுத்தமடைந்து சிவமணங்கமழும், தேய்ந்த செருப்பை எறிகிறோம். ஆனால் தேயத் தேய மணந்தருவது சந்தனமென்றே. நான எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர் புகழும் உலகம் பெறுவான் என்பது வள்ளுவர் வாக்கு. எமது மங்களகரமான விழாக்களின்போது சந்தனமும் குங்குமமும் மங்கலப் பொருளாகின்றன. திருநீறு கவசமாயின் சந்தனம் ஞான வாள் எனலாம். சந்தனம் சிவமாயும் குங்குமம சத்தியாயும் இருக்கக் காரணமாம். புருவ நடுவிலே குளிர்ச்சி பொருந்திய சந்தனம் இடுவதால் குண்டலி சக்தி சாந்தியடைகிறது. எப்பொழுதும திருநீற்றின் மேலே சந்தனம் இடுவது தவிர்க்கப்பட வேண்டுமென்பது நாவலர் வாக்கு.

இறைவனைப் பாடியவர்கள்,

சந்தனமுங் குங்குமமும் சாந்தும் தோய்ந்த தோளானை என்றும் சுண்ணவெண் சந்தனச் சாந்தும் என்றும் பாடியுள்ளார்கள்.

பூவும் பொட்டுமாய் வாழும் பெண்களிடமும் ஆண்களிடமும் இலட்சுமி களை கொட்டுகிறாள். "கஸ்தூரி கமழ் சாந்தும் பணித்தருள வேண்டும். பட்டோடு சாந்தும் பணித்தருள வேண்டும் என்று கேட்கிறார் சுந்தரர், ஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியாரைப் பாடும்போது "முத்தின் தாழ்வடமும் சந்தனக் குழம்பும் நீறுந்தன் மார்பினில் முயங்கப் பத்தியார்கின்ற பாண்டிமாதேவி என்று சந்தனப் பெருமையைப் பேசுகின்றார். சிவ சின்னங்களான விபூதி, உருத்திராக்கம், சந்தனம் குங்குமம் சைவ சமயத்தவர்களின் காப்புறுதியாகும். மும்மையால் உலகாண்ட மூர்த்திநாயனார் தினமும் சொக்கநாதருக்கு சந்தனக் காப்பிடுவதையே பணியாகக் கொண்டவர், இவருடைய பெருமையை 'எந்தைக்கண் சந்தனக் காப்பிடை என்றும் முட்டா அந்தச் செயலின் நிலை நின்றடியார் உவப்பச் சிந்தைக்கினிய திருப்பணி சந்தனக் காப்பிடல். எமது சிந்தனைக்குரியதாகும், வேற்று மத மன்னனுட்சியுட்பட்ட தனால் பாண்டிநாட்டில் சிவபத்தர்கள் இம்சைப்பட்டார்கள் சந்தனக் கட்டை கொடுக்காமற் றடுக்கவே சந்தனக் கட்டைக்கு முட்டு வந்தாலும் அக் கட்டையைப் போலத் தேய்க்கக் கைக்கு ஒரு முட்டுமில்லையே யென்று (தமது) முழங்கையைத் தேய்த்தார். அப்போது தேய்ந்த புண் ஊறு தீர்ந்து கை வண்ணம் நிரம்பின. வாசமெல்லாங் கலந்து மொய்வண்ண விளங்கொளி எய்தினர். எனவேதான் அவர் சிந்தைச் சிவமே தெளியும திருமூர்த்தியார் என்று போற்றப்படுகின்றார். இறைவனுக்கு வாசனை பொருந்திய சந்

னம், அட்சதை, அறுகு சாத்துவது வழக்கம், அதில் கற்பூரம். புனுகு முதலிய வாசனைத் திரவியங்களைக் கலந்து அருட்சத்திமயமான சந்தனத்தைச் சாத்துகின்றவர்கள் பிரபஞ்ச வைராக்கியமுடையவர்களாய்ச் சிவலோகத்தை அடைவார்கள், இது திருவருட் சத்தி பதிதல் என்னும் பாவனையாகும். பூவினிற் கந்தம் பொலிவது போலவும், சந்தனத்தில் மணம் கமழ்வதுபோலவும், சீவனுக்குள்ளே சிவமணம பூக்கக் காண்பதே சந்தனச் சிறப்பாகும். வெவ்வேறு வடிவுடனும், வெவ்வேறு பெயரோடும் வெவ்வேறிடங்களில் இருந்து இருந்தும் கோவிலுக்குச் செல்லும் சிவனடியார்கள், சிவவேடப் பொலிவுடன் திகழ்வதால் ஒருவரையொருவர் வணங்கி. இறைவனடியார்கள் என்ற ஒருமைப்பாட்டை அடைகிறார்கள். எனவே நாமும் சந்தனம்போல மணந் திகழ்ந்து, கர்ப்பூரப் பெட்டகங்கள்போல நெஞ்சம் கமழ்ந்து வாழ்வோமாக,

ஓம் சாந்தி, சாந்தி.

## மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் மணிவாசக சுவாமிகள் குரு பூசை நாவலர் ஆச்சிரமத்தில் எதிர்வரும் 29ம் திகதி 13-7-83 புதன்கிழமை சிறப்பாக நடைபெற உள்ளது.

12-7-83 செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் திருவாசகம் முற்றும் ஓதுதல் வைபவம் நடைபெறும். மறுநாள் 13-7-83 புதன் கிழமை காலை சிறப்புச் சொற்பொழிவுகள், புராணபடனம், கலந்துரையாடல், விசேட பூசை வழிபாடு, மாகேசுரபூசை ஆகியன நிகழும்.

## ஆராய்ச்சிபற்றி ... ... .... .... ....

[2 ம் பக்கத்து வளர்ச்சி]

புராணங்கள் இக் குரவரைப் பற்றி என்ன இயம்புகின்றன கூடலும் கொன்றை மரமும் வைகையும் மண்மீதிலேந்த மாதேவன் மண் சுமந்த வையகமும் இவையாவும் அரியதோர் ஆராய்ச்சிக்குரியனவன்றோ? 'ஊமைக் கடலில் வைகல் ஒழி வைகைக் கரை இன்னமும் ஒன்று எல்லாவற்றிலும் மேலான தன்டு; திருத்தொண்டர் புராணம் திருபுராணங்களில் ஒன்று சமய குரவர்கள் திருத்தொண்டர்கள் என்பது தெளிந்த வுண்மை காலத்சாற் பிந்திய சேக்கிழார் சுவாமிகள் திருவாதவூரடிகளைப் பற்றிச் சிந்திக்காது இருந்தமை ஆராய்ச்சியாளர் சிந்தனைக்குரியது. (வளரும்)

## முன்னாள் எங்கள் அச்சக முகாமையாளர் முதல்வனடி சார்ந்தார்

சைவப்பிரகாச அச்சகத்தின் அதிபராகக் கடமையாற்றிய முன்னாள் அதிபர்களிற் பல ஆண்டுகளாக கிருவகித்த பெருமைக்குரியவர் திருவாளர் சு. பொ. கந்தையா அவர்கள்.

கணக்கியற் பகுதியிலே திறமையும் அனுபவமும் பெற்ற திரு கந்தையா அவர்கள் அதற்கென ஒரு கழகம் அமைத்துத் தட்டச்சு சுருக்கெழுத்து கணக்கியல் முதலிய பாடங்களைக் கற்பித்தும் பயிற்சியளித்தும் அநேக மாணக்கர்கள் தேர்ச்சிபெற உழைத்தனர். அதன் பின் சைவப்பிரகாச அச்சகத்தின் அதிபராக 1947 ம் ஆண்டு தொடக்கம் 1959 ம் ஆண்டு வரைக்கும் திறமையாகச் செயலாற்றி வந்தனர்; சைவ பரிபாலன சபையின் நிருவாக சபையில் நீண்ட காலம் அங்கத்தவராகத் தொண்டாற்றி வந்தனர்.

யாழ். இரசிக ரஞ்சன சபாவிலும் அங்கத்தவராய் உழைத்தனர். கம்பீரமான தோற்றம். அதற்கேற்ற நிருவாக நெறி ஆற்றல். எல்லோரையும் இன்சொல்லாலே தன் வயப்படுத்திக் கருமம் ஆற்றுவிக்கும் இனிய சுபாவமுடையவர்.

சபையும் அச்சகமும் இந்துசாதனப் பத்திரிகையும் என்றும் இப்பெரியாரின் அளப்பருந் தொண்டிற்கு நன்றி கூறக் கடமையுடையவர்கள். தமது எண்பத்தாறும் வயதிலே பழுத்த பழமாக நழுவிவிட்டனர், அவர்கள் ஆன்மா சாந்தியடைவதாக,

## Essence of SAIVA SIDDHANTA

(By M. Eliathamby, B. A.)

contd. from our last issue

The essential postulate of Saiva Siddhanta implies a pre-existent material cause. There are three causes for an effect to take place. They are the material cause, instrumental cause and efficent cause. In the creation of the universe Maya is the material cause God's Grace is the instrumental cause and God is the efficient cause. In the manufacture of a pot clay is the material cause wheel and rod are the instrumental cause and the potter is the efficient cause The efficient cause is always an intelligent one. In the presence of God the cosmic activity goes on just as a lotus blossoms in the presence of the sun. —

HINDU ORGAN

Fri. 17, 24-6-83

## PRAYER MEETINGS IN PLACE OF POLITICAL FORUM

As a diversion, if not a way out of the aggressive confusion that is enveloping the entire world, we feel, as members of religious associations, that prayer meetings would do well to effect a congenial change of outlook and activity.

The one and only leader of men in recent history, Mahatma Gandhi, that dedicated apostle of duty and devotion to truth, punctuated his activities with regular prayer meetings where his vast audiences listened to his lofty ideas and learnt to become better citizens

It is now the eleventh hour in this chapter of crises; it, therefore, becomes the bounden duty of religious leaders to step in and gently advise all those who parade the world as politicians to pause for a while and think in terms of humanity, humanism and honour.

The political atmosphere has become polluted; demonstrations that neither reflect ideas nor indicate courses of action have become the order of the day. Law and order have simply become lifeless.

The result is pandemonium, Man has been confounded out of his wits and made a mechanical machine to break the tradition of duty and discipline.

What is the way out of this worrying depression of values?

Here it is that religion becomes instantly useful.

The prayer meetings of Mahatma Gandhi constitute the most precious part of his championship for truth and justice. He and he alone could instil pure thoughts into the minds of those hit by misgivings and inspire proper feelings;

Most earnestly do we request the people to organize prayer meetings in every village and offer prayers to Providence so that the dark clouds of distrust could disappear and the bright sky of goodwill and fellowship reappear; These prayer meetings shall be for prayers only and not for political sermons that kindle the base passions of anger and hatred.

# Maviddapuram Kanthaswamy Temple

The Acharya - abishebam of Siva Shri Shan — Ratnasabapathy Sharma, eldest son of Maharajarajahsri S. D. Shanmuganatha Kurukkal, managing High Priest of Maviddapuram Aatheenam and heir apparent to the management of this ancient Temple, was performed recently in typical Sivagamic requirements, presided over by Sivashri Vaithianatha-Sivachariyar Thirupukalur and assisted by several leading high priests, in the presence of the cream of Saiva Society.

A concise historic account of the dynasty of the managing High Priest and the consecration of the Temple is appropriately given here in this context.

History has it that there were in this region oozing springs of fresh water sweeter than even elixir, that acquired the special attribute 'Kandake' and the derivative name "Anthar Vavi" because of the mystic powers of the Yogis who gathered



there in their "Parnasalas led by the revered Nagula Munivar. These Yogis regularly perfomed penances after dipping themselves in these sacred springs and thereby developed special powers of Thapas. Hence this region came to be known as 'Kovitkadavai' until the seventh century A. D. when a Chola Princess by the name of Maruthapuravalli became associated with a spiritul marvel in this locality. In the year 785 A. D. this Chola Princess who happened to be the daughter of Thissai Ukkra Cholan, a King of the Cholian Regime in South India, having been afflicted with a congenital disease that changed her facial appearance and made it horse-like and finding that medical aid was of no avail decided to under-take a holy pilgrimage to sacred spots to seek divine remedy. Guided by a divine utterance that directed her to proceed to Keerimalai, the Chola Princess arrived with her retinue at the holy precincts of Keerimalai and began performing regular Theertham rituals at the sacred springs. The curative effect of these oozings coupled with the blessings of the Munivars of the holy vicinity miraculously helped her regain her full facial beauty, dispelling the discomforting disease that had continuously hit her. During the days of her sojourn in this region she offered her daily prayers at the Kaltiresan Temple under the salubrious shade of a big tree. The idol was a Vel of copper. Conscious of the fact of the benign blessings of Lord Skantha relieving her of physical pain and mental agony, the Chola Princess immediately inaugurated the Thirupani of consecrating a Shrine at that very spot with the support of her kingly father, Thissai Ukkra Cholan. In order to preserve the sacred Shrine the Chola princess appointed a leading Thidshathar of Chidamberam known as Periamanathular as the managing High Priest. This episode took a further happy turn when Ukkra Singan, a Kalinga King who was then reigning over this district from Singai Nagar sought the hand of Maruthapuravalli This historic wedlock resulted in the birth of Prince Narasingam who later assuming the titular name of 'Seithungavararajasingam' ruled over the Northern region and invited Yalpadi to colonize this

(contd. in page 3)

# HIGHWAY HOOLIGANISM

A cancerous growth in the body politic of this once serene country seems to be spreading its area of incidence, menacing even most vital parts of society.

The seats of higher learning having become the area for unbridled aggression on normal life, now the general pointer has been towards more serene spheres.

The devildom that prevailed in front of the residences of three public officers who preside over the highest courts in this Isle must now open the eyes of the Authorities who are pledged to preserve law and order and make them feel that there is something wanting in the administrative structure, Demonstrations. in the present age, assume extra - ordinary capabilities. How and where they will end nobody knows. That such outward exhibitions of feelings should take the form of devil-dances and that menacingly in places where they dare not step in. is a treacherous trend that if unchecked will gnaw away all that has woven the golden web of demcoracy.

The only saving grace is that in this country the judiciary has established itself as the highest seat of discipline decorum and dedication, to duty unhampered by any evil trend. The tradition has become so truly rooted that today. Justice in this country has become a divine duty.

Hence highway hooliganism cannot have any effect in these sacred precincts.

However, those who hatched this base design of devilry must be traced and taught the lesson they deserve so that this misguided enthusiasm might be silenced once for all

The entire country denounces this demonstration as the worst degenerate show any human being can conceive of this insensate exhibition could not have been on a momentary impulse; it had been designed in detail and executed complacently by persons who could afford to be reckless. Hence these daredevils can certainly be traced. If this sordid affair cannot be unearthed and the feindish foxes driven from their hiding holes, then the administration will be only accepting its inefficiency and insufficiency. It cannot be. The full story must be told publicly.

The sanctum sanctorum of law and order is as holy as the Holy Shrine. Assemblies of judges, including those other persons who act as tribunals are, ipso fact, places of serenity and tranquility They who are chosen to preside over these assemblies should be deemed as incapable of doing any wrong. This ancient tradition that has acquired spiritual sanctity cannot be allowed to be broken by any one, least by the damnable.

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக வுலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K S. Road, Vannarponnai, Jaffna. (Telephone No. 22336) on Friday, 17, 24-6-83*

Editor in Chief:
R. N. Sivapirakasam

